[6th August 1966

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இப்போதும் கட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. சர்க்கார் தவருகப் பதில் கொடுக்கிருர்கள் என்று நினைக்கிறேன். திருப்பத்தூர் தாலூகாவுக்குள்ளேயே ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்குக் கூடப் போக முடியாத நிலை இருக்கிறது. காரணம் சட்டத்தில் ' Attempt is also an offence ' என்றிருக்கிறது. இதைப் பயன் படுத்தி அதிகாரிகள் தடைசெய்து வருகிருர்கள். ஆகவே, இந்த உத்தரவை மாற்றுவதற்குச் சர்க்கார் மூன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் தவருகப் பதில் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னுர்கள். அப்படியொன்றுமில்லை. அங்கு இருக்கக்கூடிய கலெக்டர் அவர்கள் கொடுத்திருக்கின்ற தகவல்களை வைத்துக்கொண்டுதான் பதில் சொல்லுகிறேன். ' movement within the district ' என்ற அளவில் restrict பண்ணுகிருர்கள். ஆகவே இதில் தவறு ஒன்றுமில்லை.

திரு. சா. கணேசன் : திருப்பத்தூர் தாலூகாவில் ஒரு எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு 35 மைல் தூரம் இருக்கிறது. இந்த எல்லைகளுக்கு இடையில் இருக்கின்ற இடங்களுக்குள்ளேயே நெல் போகப்பட்டது என்று பிடிக்கப்பட்டு அநேக வழக்குகள் கோர்ட்டுகளுக்குப் போய் அங்கே சென்ற மாதம்கூட தண்டனை கொடுத்திருக்கிருர்கள். இம்மாதிரி ஜில்லாவுக்குள்ளே அல்லது தாலூகாவுக்குள்ளே உணவு தானியங்கள் கொண்டுபோனுர்கள் என்பதற்காகப் பிடிக்கப்பட்டுப் போடப்பட்டிருக்கும் எல்லா வழக்குகளையும் வாபஸ் வாங்கவேண்டும் என்று அரசாங்கம் அறிவிப்பு அல்லது அட்வைஸ் பண்ண முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் சபாநாயகர் அவர்களே, கொள்முதல் நடக்கும் சமயத்தில் கொள்முதல் வெற்றிகரமாக நடக்கவேண்டும் என்பதற்காக அங்கங்கு இருக்கின்ற நிலைமைக்கு ஏற்ப கலெக்டர் அவர்கள் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள். ஆகவே, அரசாங்கம் இதில் தலையிட்டு வியாஜ்யத்தில் இருக்கும் வழக்குகளை எல்லாம் வாபஸ் செய்ய வேண்டும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*165 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாப்பாட்டிற்காகத் தலைச்சுமையில், சைக்கிளில் ஜில்லாவின் எல்லைக்குள் உணவு தானியங்களை எடுத்துச் செல்வதற்குக் கொள்முதல் அதிகாரிகள் தடை செய்கிறதாகப் புகார்கள் சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கின்றனவா?

(இ) ஆமெனில், அவைமீது சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

6th August 1966]

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், ஜில்லாவுக்குள் தலைச் சுமையில் கொண்டுபோகப்படும் உணவு தானியங்களைத் தடை செய்யக்கூடாது என்று ஜில்லா அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதா ? தலைச்சுமையில் கொண்டுபோகும் அளவுக்கு சைக்கிள்களிலும் கொண்டு போகலாம் என்று இதன் மூலம் எடுத்துக்கொள்ளலாமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தலைச்சுமையிலும், சைக்கிள்களிலும் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குத்தான் கொண்டு போகலாம். அரிசி 10 லிட்டர் அளவுக்கும், மற்றத் தானியங்கள் 10 கிலோ கிராம் அளவுக்கும் கொண்டு போகலாம் என்றிருக்கிறது. அதற்கு மேல் கொண்டுபோகவேண்டும் என்றால் பெர்மிஷன் வாங்கவேண்டும்.

*** 166 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குத் தங்கள் சொந்தத் தேவைக்கு நெல், அரிசி எடுத்துச் செல்வதற்கு கெஜட்டெட் ஆபீசர்களும் பெர்மிட் பெறவேண்டுமா ?

(இ) ஆமெனில், அதற்கான பெர்மிட் யாரிடமிருந்து பெற வேண்டும் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The permits may be obtained from the Revenue or Civil Supplies authorities not lower in rank than that of a Deputy Tahsildar having jurisdiction over area in which the land is situated.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கெஜட்டெட் அதிகாரிகள் தங்கள் சொந்த நெல்லை வெளியிடங்களிலிருந்து கொண்டு வருவதற்குத் தங்களைவிடக் குறைந்த அந்தஸ்துள்ள அதிகாரிகளிடத்தில் போய் பெர்மிஷன் வாங்குவதற்குத் தயக்கம் கொள்கிறார்கள். ஆகவே, இவர்கள் தேவையான தங்களுடைய தானியத்தைக் கொண்டு வருவதற்குத் தங்களைப் போன்ற அதிகாரியிடமிருந்து பெர்மிஷன் வாங்குவதற்கு வழிவகை ஏதேனும் செய்ய முடியுமா ? இல்லையென்றால் அதில் என்ன கஷ்டமிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதில் அந்தஸ்து குறைந்த அதிகாரி, உயர்வான அதிகாரி என்று எடுத்துக்கொள்ள முடியாது. யார் யாரிடத்தில் எந்தெந்த ஜூரிஸ்டிக்ஷனிலுள்ளவர்கள் பெர்மிஷன் வாங்கவேண்டும் என்றிருக்கிறதோ, அதன்படி கண்டிப்பாக பெர்மிஷன் வாங்கித்தான் ஆகவேண்டும்.

TRUTH ALONE TRIUMPHS